Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12



**ஜெபம்** என்பது
ஏதோ வீண் வார்த்தைகளால்
அலப்புவதோ, பிதற்றுவதோ, தேவனை
ஏதோ சில வார்த்தைகளால்
புகழ்ந்துரைப்பதோ அல்ல.

நம்முடைய ஜெபம் நமது **உள்ளான உணர்வுகளை**
தேவனுக்கு வெளிப்படுத்திக் கொடுக்கிறது.

சரியான ஜெபத்தில், **ஜீவனை**யும், **பெலத்தை**யும், **திடனை**யும்,
**உள்ளன்பை**யும் நீங்கள் கண்டுகொள்ள முடியும்.

உதட்டளவிலான சேவையோடும், சரீர பயிற்சியோடும்,
சில ஜெபங்களை முணுமுணுப்பதோடும்
எத்தனை பேர் திருப்தியடைந்துவிடுகின்றனர்.

- ஜான் பன்யன்

இப்பொழுது தியானித்துக்கொண்டிருப்பது . .

வேத ஆராய்ச்சி பாடங்கள் ஜெபம்

வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்
மாலை - 6.30 மணி முதல் 8.00 மணி வரை
இடம்: ஏ-4. டேஜூ ப்ளாஸா. 2. தெற்கு அவென்யூ.
ஸ்ரீநகர் காலனி. சைதாப்பேட்டை.
சென்னை - 600 015.
( சைதாப்பேட்டை கோர்ட் அருகில் )



Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# எக்காளம்

VOL . 4 ISSUE . 5
தனிப்பிரதி ரூ 20/= டிசம்பர் 2010



**பலியிடுவதைப் பார்க்கிலும்,
நீதியும் நியாயமும்
செய்வதே
கர்த்தருக்குப் பிரியம்**
– நீதிமொழிகள் 21:3

# கர்த்தருக்கு பிரியமான நீதியும், நியாயமும்

— நிஜா ஜெகன்னடி

**பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்** (நீதிமொழிகள் 21:23).

நீதி என்பது விதிமுறைகளின்படி, நேர்மையாக, முறையாக நடந்து கொள்வது. நியாயம் என்பது, நீதியோடு நடப்பதற்கும் மேலாக இரக்கமாய் இருப்பதாகும். **நீதி ஜனத்தை உயர்த்தும்** (நீதிமொழிகள் 14:34). நீதியாய், உண்மையாய் இருப்பவர்கள்மேல் கர்த்தருடைய தயவு இருப்பதால், அவர்கள் இருக்கும் பட்டணமே, மிகவும் சிறந்ததாக உயர்ந்து மேலான நிலைக்கு வரும். நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்யும்போது, வாழ்ந்து சுகித்திருப்போம். மற்றவர்கள் நேர்மையற்ற முறையில் நடத்தப்படும்போது, அவர்களுக்கு நீதி கிடைக்க உதவி செய்ய வேண்டும். தேவன் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறார். நேர்மையற்ற காரியங்களை மற்றவர்கள் செய்தால், அதை அவர்களுக்கு தவறு என்று எடுத்துக் காண்பிக்கவேண்டும். **நீதியைப் பின்பற்றுகிறவனையோ கர்த்தர் நேசிக்கிறார்** (நீதிமொழிகள் 15:9).

மனுஷனுடைய பார்வையில் நீதி என்பது, ஒரு மனிதனின் வெளியரங்கமான நடத்தையே. ஆனால், கர்த்தரோ இருதயத்தின் எண்ணங்கள், நோக்கங்கள் சுத்தமாக இருப்பதையும் நீதியாக காண்கிறார். நாம் ஒரு காரியத்தை குறிப்பிடும்போது, அதை உள்ளவாறே சொல்ல வேண்டும். மாற்றி சொல்லக் கூடாது. சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும், எது நீதியோ அதை அப்படியே சொல்ல வேண்டும். சூழ்நிலைக்கேற்ப, மனிதனுக்கு ஏற்ப மாற்றி பேசக்கூடாது.

நாம் செய்கிற காரியம் எதுவாயிருந்தாலும் கர்த்தருக்கு பிரியமானதுதானா என்பதை சிந்தித்து, பின் செயல்பட வேண்டும். ஏனென்றால் நாம் நம் சுய அறிவின்படி நம்முடைய பார்வையில் எல்லாவற்றையும் சிந்தித்து செய்கிறோம். நாம் கர்த்தருடைய பார்வையில் எல்லாவற்றையும் பார்க்க கற்றுக் கொள்ளவேண்டும். கர்த்தர் ஒரு காரியத்தை எப்படியாக பார்க்கிறார்; எப்படி அதைச் செய்வார் என்பதை நாம் சிந்தித்து, பின் அந்த காரியத்தை செயல்படுத்த வேண்டும். நாம் வேதத்தை படிக்கும்போதுதான் கர்த்தருக்குப் பிரியமானது எது என்றும், பிரியமில்லாதது எது என்றும் அறிந்து கொள்ள முடியும். கர்த்தருடைய இருதயத்தின் விருப்பத்தை நாம் நிறைவேற்ற முடியும். கர்த்தருடைய வார்த்தையை படிக்காமல், அவருடைய இருதயத்தின் வாஞ்சைகளை அறிந்து கொள்ளாமல் இருந்தால், அவருக்கு பிரியமானதை செய்ய முடியாது. நாம் சுய விருப்பத்தின்படி ஒன்றைச் செய்யும்போது, அதன் பின்விளைவுகள் எப்படி இருக்கும் என்று நமக்கு தெரியாது; மேலும் நாமே பின்விளைவுகள் இப்படித்தான் இருக்கும் என்று நம்புகிறோம். கர்த்தர் மாத்திரமே ஒரு காரியத்தின் பின்விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை அறிந்திருக்கிறார். ஆதலால் நாம் அவருக்குப் பிரியமானதை செய்யும்போது, நம் வாழ்க்கை அசீர்வதிக்கப்பட்டதாய் இருக்கும். நாம் நம் விருப்பத்தின்படி காரியங்களை



செய்யும்போது, நம்மை அழிவுக்கு நேராய் கொண்டு போய்விடும்.

கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்து, அவருக்குப் பிரியமானதைச் செய்யாமல், தன் பார்வைக்கு நலமாய் தோன்றியதைச் செய்த இரஸ்வேலின் ராஜாவாகிய சவுலைக் குறித்து பார்ப்போம்.

சவுல் ராஜாவாயிருந்தபோது, கர்த்தர் சாமுவேல் தீர்க்கதரிசியின் மூலமாக அவனோடு பேசினார். அமலேக்கியரோடு போரிட்டு, அவர்களையும், அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்து விடும்படி கர்த்தர் கூறினார். சவுல் அமலேக்கியரை தோற்கடித்து ஜனங்கள் எல்லோரையும் கொன்று போட்டான். ஆனால், அமலேக்கின் ராஜாவையும் ஆடுமாடுகளில் சிறந்தவற்றையும் அழிக்காமல் விட்டுவிட்டான். சவுல் கர்த்தருக்கு முழுமையாக கீழ்ப்படியவில்லை. கர்த்தர் சாபத்திற்குள்ளானது என்று எதை ஒதுக்கி அழிக்கச் சொன்னாரோ, அதை அவன் அழிக்காமல் அதை விரும்பி சேகரித்து உயிரோடே கொண்டு வந்தான். ஜனங்களுக்கு பிரியமாய் நடந்து கொண்டு, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், யுத்தத்தில் சூறையாடினவற்றின்மீது, அவன் சிந்தை போனது. இது தேவனுடைய பார்வையில் பொல்லாததாயிருந்தது. சவுல்



சாமுவேலிடம், கர்த்தருக்கு பலியிட ஆடுமாடுகளில் நலமானவற்றை கொண்டு வந்தோம் என்று கூறினான். அதற்கு சாமுவேல் நீர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அவரை பின்பற்றாமல் விட்டுவிட்டீர் என்றான். கர்த்தர்தகன பலிகளைவிட கீழ்ப்படிதலையே விரும்புகிறார். கர்த்தருக்கு கீழ்ப்படிய மறுப்பது பில்லி சூனியத்திற்கு இணையான பாவம். முரட்டாட்டம் பண்ணுதல், அவபக்திக்கும், விக்கிரகங்களை தொழுது கொள்வதற்கும் சமம் (1 சாமுவேல் 15:22,23). சவுல், கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்தபடியினால், கர்த்தர் அவனை ராஜாவாயிராதபடி புறக்கணித்துத் தள்ளினார். கர்த்தர், சவுலை ராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். சவுல், கர்த்தருக்கு பலி செலுத்துவதை பெரிதாக நினைத்தான். ஆனால், கர்த்தரோ கீழ்ப்படிதலையே மேன்மையாக பார்க்கிறார்.

இங்கு பலி என்று கர்த்தர் குறிப்பிடுவது, சடங்காச்சாரமாக, சம்பிரதாயமாக அவரை தொழுது கொள்வதும், காணிக்கைக் கொடுப்பதும். இப்படிச் செய்வது, வெளிப்புறமாக செய்கையினாலே பக்தியை காட்டிக் கொள்வதாகும். இதில் கர்த்தர்மேல் உள்ளார்ந்த அன்பு இல்லை. அவரை விட்டு விலகி இருந்து கொண்டு, வழக்கம்போல அவரை ஆராதிப்பதில் ஒரு பயனும் இல்லை. இருதயத்தின் ஆழத்திலிருந்து முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், பயபக்தியோடு அவரை ஆராதிக்க வாஞ்சிக்கிறார். கர்த்தர் மேலுள்ள அன்பினால் நிறைந்து, அவரை ஆராதிக்காமல், உண்மையாக ஆராதிப்பது போல பாவனை செய்வதை கர்த்தர் வெறுக்கிறார். **உன் பாட்டுகளின் இரைச்சலை என்னை விட்டு அகற்று; உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன்** (ஆமோஸ் 5:23). கர்த்தரிடத்தில் உண்மையிலே அன்புள்ளவர்களாக இருப்பதும், அவரை தொழுது கொள்வதும் எப்படியெனில், அவருக்கு பிடித்தமானதை செய்வதே. நீதியும் நியாயமுமாக இருப்பதே அவருக்கு பிரியம். **நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டு வரக்கடவது**

(ஆமோஸ் 5:24). நாம் அப்படியிருக்கவே கர்த்தர் வாஞ்சிக்கிறார். நாம் காணிக்கைகளை கொடுப்பவதை விட சரியான, நேர்மையான செயல்களை செய்வதையே கர்த்தர் விரும்புகிறார். நம்முடைய இருதயம் தேவனிடத்தில் இல்லாமல், தேவனுக்கும், நமக்கும் எந்தவித தொடர்பில்லாமல், சடங்காச்சாரமாக கொடுக்கும் காணிக்கையினால் ஒரு பயனும் இல்லை.

**துன்மார்க்கனுடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது** (நீதிமொழிகள் 15:18). அநியாயமாக சம்பாதித்து, காணிக்கையாக அதை கர்த்தருக்கு கொடுப்பதை கர்த்தர் வெறுக்கிறார். ஆலயத்திற்கு தவறாமல் போவதினாலோ, தசமபாகம், காணிக்கை கொடுப்பதினாலோ, கர்த்தருக்கு பிரியமாய் இருக்க முடியாது. நாம் கர்த்தர்மேல் அன்பாயிருக்கவும், அவருக்கு கீழ்ப்படிவதையுமே நம்மிடம் எதிர்பார்க்கிறார். நம் நேரத்தையும் ஆற்றலையும் பணத்தையும் கொடுப்பதை காட்டிலும், நம் இருதயத்தில் இடம் கொடுப்பதையே அவர் விரும்புகிறார். தேவன் அவரது பிள்ளைகள் நீதியும், நியாயமுள்ளவர்களாக, இரக்கமுள்ளவர்களாக, தாழ்மையுள்ளவர்களாக இருக்க விரும்புகிறார். நாம் நீதியும், நியாயமுள்ளவர்களாக இருக்கிறோமா? இரக்கமுள்ளவர்களாக இருக்கிறோமா? தேவனை பிரியப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோமா? எல்லா மனிதர்களின் உறவும் எனக்கு வேண்டும் என்று சொல்லி நியாயத்தை எடுத்துச் சொல்லாமல், கண்டும் காணததுபோல இருக்கிறோமா? இயேசு கிறிஸ்து நம் உள்ளத்தை ஆராய்ந்து அறிந்திருக்கிறார். பரிசேயர்கள், தேவனை நேசிக்காமல், நியாயமில்லாமல் நடந்து கொண்டு காணிக்கை கொடுப்பதை இயேசு கிறிஸ்து கண்டித்தார். பரிசேயரின் உள்ளம் பிறரை ஏமாற்றுவதிலும், பேராசையினாலும், கொள்ளையினாலும், கெட்ட எண்ணங்களினாலும், மற்றவர்களுக்கு மனவருத்தத்தை உண்டு பண்ண வேண்டுமென்ற நோக்கத்துடன் நிறைந்திருப்பதை சுட்டிக் காட்டுகிறார். நாம் மாய்மாலமற்றவர்களாக இருக்க விரும்புகிறார். நம் மனதை சுத்தமாக வைத்துக் கொள்ள நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்ப்பது, நாம் அவரை நேசிக்க வேண்டும். மற்றவர் களிடம் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். அதே நேரத்தில் காணிக்கை, தசமபாகங்களையும் கொடுக்க வேண்டும். கர்த்தருக்கு பிரியமில்லாமல் நடந்து கொண்டு நிறைய காணிக்கை கொடுப்பதால் அவரது கவனத்தை நம்மேல் திருப்ப முடியாது.

சிலர் கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கும்போது, விருப்பமில்லாமல் கொடுப்பார்கள். இன்னும் சிலர் ஊழியக்காரருக்கு கொடுப்பதாக நினைத்து கொடுப்பார்கள். நாம் காணிக்கைகளை கொடுக்கும்போது, கர்த்தருக்கு கொடுக்கிறோம் என்ற எண்ணத்தோடு முழுமனதோடு சந்தோஷத்தோடு கொடுக்க வேண்டும். சிலர் காணிக்கைகளை மற்றவர்கள் காணும்படியாகவும், மற்றவர்கள் அறியும்படியாகவும் கொடுப்பார்கள். அதற்கு பலன் கிடைக்காது.

ஒரு குறிப்பிட்ட வேலைக்கு ஒருவர் விண்ணப்பம் செய்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இன்ன நபர் சிபாரிசு செய்தால், அந்த வேலை தனக்கு நிச்சயம் கிடைக்கும் என்று அவர் அறிந்திருந்தால், அந்த நபரை சென்று பார்த்து, அவரைப் பிரியப்படுத்துவதற்காக அவருக்கு பரிதானத்தை (லஞ்சம்) கொடுத்து, தனக்காக சிபாரிசு செய்யும்படி கூறுவார். இது தவறான முறையில் அந்த வேலையை வாங்க முயற்சிப்பதாகும். இது பாவம். அதுபோல நாம் கர்த்தர் மேல் உண்மையான அன்பில்லாமல், அவரை பிரியப்படுத்துவதற்காகவும், கடமைக்காகவும், சடங்காச்சாரமாகவும், இன்ன காரியம் நடக்க வேண்டும் என்பதற்காக கொடுப்பது தவறு. கர்த்தர் மேலுள்ள அன்பினால் நிறைந்து, கர்த்தர் நம் வாழ்க்கையில் செய்த நன்மைகளுக்காய் நன்றி உணர்வினால் நிறைந்து கொடுக்கும் காணிக்கையை கர்த்தர்



அங்கீகரிக்கிறார். நம் இருதயத்தின் எண்ணங்களையும், நோக்கங்களையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. நம் வாழ்க்கையில் நாம் எப்படியாக நடந்து கொள்கிறோம்? அவருக்கு பிரியமான ஒரு வாழ்க்கையை வாழ்கிறோமா? நாம் கர்த்தருக்கு பிரியமில்லாத வழியில் நடந்து கொண்டு, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருந்துகொண்டு, நாம் அவருக்கு கொடுக்கும் காணிக்கையில் கர்த்தர் பிரியமாயிருக்கமாட்டார். நாம் மற்றவர்களிடம் அன்பாயிருக்கிறோமா? மற்றவர்களையும் நம்மைப்போல நேசிக்கிறோமா? **நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்கு கொடுக்கிறேன் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார்** (யோவான் 13:34). இயேசு கிறிஸ்து நம்மை நேசிக்கிறதுபோல, நாம் மற்றவர்களை நேசிக்கிறோமா? நம்முடைய பாவங்களுக்காக, அவரையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படும் ஒவ்வொருவரின் பாவத்தையும் மன்னித்து மறந்துவிடுகிறார். அவர்களை பரிசுத்தமாக்கி, நீதிமானாக்கிவிடுகிறார். இப்படியாக அவருடைய அன்பை வெளிப்படுத்துகிறார். நாமும் மற்றவர்களை நேசிப்பதன்



மூலமும், மன்னிப்பதன் மூலமும், உதவி செய்வதன் மூலமும், இயேசு கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தலாம். தன்னை காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்தை சிநேகிதனே என்று அழைத்தார். தன்னை சிலுவையில் அறைந்தவர்களின் மேல் அவர் கோபப்படவேயில்லை. எல்லா வேதனைகளையும் பொறுமையோடு சகித்தார். அவர்களை அன்போடு, பார்த்து பிதாவை நோக்கி அவர்களுக்காக இப்படியாக ஜெபித்தார்: **''பிதாவே இவர்களை மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்''** (லூக்கா 23:24). நாமும் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கிறோம் என்பதை, நம் பேச்சிலும், செயலிலும் வெளிப்படுத்த வேண்டும்.

நாங்கள் முன்பு குடியிருந்த வீட்டின் சொந்தக் காரர், திடீரென்று ஒரு மாதத்திற்குள் வீட்டை காலி பண்ணும்படி வற்புறுத்தினார். வீட்டை காலி பண்ணவில்லையென்றால், வீட்டு சாமான்களை எடுத்து வெளியே எறிந்துவிடுவதாகவும், ஒன்றாம் தேதி வீட்டு சாவி அவர் கையில் இருக்க வேண்டும் என்று மிரட்டினார். நியாயமில்லாமல், கடுமையாக நடந்துகொண்டார். சட்டத்தின்படி நியாயமாக இவ்வளவு காலம் என்கிற கால அவகாசம் கூட அவர் கொடுக்க வில்லை. அவரிடம் அன்பில்லாமல் போனதினால் நியாயமற்ற முறையில் நடந்து கொண்டார்.

மற்றவர்களை நியாயமின்றி நடத்துகிற குணமுடையவர்களாக நாம் இருக்கிறோமா? நம் குணங்களில் குறைபாடு உள்ளதா? தாராள மனப்பான்மை உடையவர்களாக இருக்கிறோமா? அல்லது கஞ்சத்தனமுள்ளவர் களாக இருக்கிறோமா? நாம் மற்றவர்களுக்கு கொடுக்கும்போது, அவர்கள் எதிர்பார்ப்பதற்கு மேலாக, மகிழ்ச்சியோடு கொடுக்கிறோமா? அல்லது விருப்பமில்லாமல் கொடுக்கிறோமா? நாம் எந்த மனத்தோடு கொடுக்கிறோம் என்பதை கர்த்தர் அறிந்து அதன்படி நமக்கு பலனளிப்பார்.

உங்களிடம் வேலை செய்பவர்களை எப்படி நடத்துகிறீர்கள்? நியாயமான

கூலியை கொடுக்கிறீர்களா? அவர்கள் தங்கள் தாலந்துகளை, தங்கள் யோசனைகளை பயன்படுத்தி, திறம்பட வேலைகளை உண்மையும் உத்தமுமாக செய்து கொடுக்கிறார்கள். அவர்கள் நேரத்தையும், திறமையையும் செலவிடுகிறார்கள். உங்களுக்காக உழைக்கிறார்கள். அப்படி சிறப்பாக வேலை செய்து கொடுப்பவர்களுக்கு அநேகர் கூலியை கொடுக்காமலேயே அனுப்பிவிடுவார்கள். **போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று கர்த்தர் சொல்லுகிறார்** (உபாகமம் *25:4*). இன்னும் சிலர் நியாயமாக கொடுக்க வேண்டிய கூலியை கொடுக்காமல், எவ்வளவு குறைக்க முடியுமோ, அவ்வளவு குறைத்து கொடுப்பார்கள். இன்னும் சிலர் வேலை முடிந்தவுடன் கூலியை கொடுக்காமல், அலைய விடுவார்கள். **கூலிக்காரனு டைய கூலி விடியற்காலம் மட்டும் உன்னிடத்தில் இருக்க லாகாது என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது** (லேவியராகமம் *19:13*). உரிய நேரத்தில் காலந்தாழ்த்தாமல் வேலை முடிந்தவுடன் கூலியை கொடுக்க வேண்டும். சிலர் கூலி கொடுக்க விரும்பாமல், வேலையை எப்படி சிறப்பாக செய்ய வேண்டும் என்கிற அனைத்து ஆலோசனைகளையும் அவர்களிடமிருந்து இலவசமாக பெற்று கொண்டு, அவர்களை வெறுமையாக அனுப்பி விடுவார்கள். பின் மிகக்குறைந்த கூலிக்கு வேறொரு நபரை வைத்து அந்த வேலையை செய்து விடுவார்கள். இவர்கள் வேலை செய்பவர்களுக்கு கூலியை கொடுப்பதற்கே அநேகமுறை யோசிப்பார்கள். **வேலைக்காரன் கூலிக்கு பாத்திரனாயிருக்கிறான்.** (*1* தீமோத்தேயு *5:18*). இப்படிப்பட்டவர்களிடம் உண்மையான அன்பு இல்லை. தன்னைப்போல மற்றவர்களையும் நேசிக்கவில்லை. பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்வதுபோல, நீ எல்லாவற் றிலும் வாழ்ந்து சுகமாயிரு என கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது. இவர்களுடைய ஆத்துமா வாழாமல் குறுகிப்போய் இருக்கிறது. இவர்கள் எல்லோரும் மனுஷனைப் பார்க்காமல், பணத்தையே பெரிதாக பார்க்கிறார்கள். இவர்கள் பணத்தையே நம்பி வாழ்கிறவர்கள். கர்த்தரை நம்பி வாழமாட்டார்கள். கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்.

**பலியை அல்ல இரக்கத்தையும், தகன பலிகளைப் பார்க்கிலும், தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன்** (ஓசியா *6:6*). நாம் இரக்க குணமும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். துன்பத்தில் இருப்பவர்களுக்கு உதவ ஆயத்தமாயிருக்க வேண்டும். அதை விருப்பத்தோடே செய்யவேண்டும். இப் பொழுது நாங்கள் இருக்கும் பிளாட்டில், குளியலறையிலிருந்து சாக்கடை தண்ணீர் படுக்கையறை, ஹால், பால்கனிவரை வீட்டிற்குள்ளே வந்து விட்டது. இந்த கட்டிடத்தின் செயலாளரிடம் போய் சொன்னபோது, இருதயத்தை கடினப் படுத்தி உதவி செய்ய மறுத்துவிட்டார். இரக்கமில்லாமல் பேசினார். சுயநலமாக இருப்பதால், நியாயம் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லாதிருந்தது. அந்த சூழ்நிலையின் நெருக்கத்தையும் அவசரத்தேவையையும் உணர்ந்து கொள்ளாமல் இருந்தார். தான் செய்ய வேண்டிய கடமையை செய்ய மறுத்தார். நீதி, நியாயம், இரக்கமில்லாமல், நடந்து கொண்டார். தனக்கு இப்படி ஒரு நெருக்கடியான சூழ்நிலை வந்திருந்தால், எப்படி இருந்திருக்கும் என்று அவர் யோசித்து பார்த்திருக்கவேண்டும்.

## ஏழைகளுக்கு கொடுங்கள்

**ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான், அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்** (நீதிமொழிகள் *19:17*). ஏழைகளுக்கு உதவி செய்யும்போது, கர்த்தரிடமிருந்து நமக்கு ஆசீர்வாதம் கடந்து வரும். அதனால் தாராள மனதோடு அவர்களுக்கு உதவவேண்டும். கஷ்டப்படும் ஏழை, எளிய ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும்.



அவர்களுடைய கஷ்டத்தை அறிந்தும், அறியாதவர்கள்போல இருக்கக் கூடாது. **தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்** (நீதிமொழிகள் *14:21*).

**வாரியிறைத்தான் ஏழைகளுக்கு கொடுத்தான் அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்** (சங்கீதம் *112:9*). இங்கே வாரியிறைத்தான் என்று வேதத்தில் குறிப்பிடப்படும் காரியம் என்னவென்றால், ஒரு விவசாயி நிலத்தில் விதையை விதைக்கும்போது, அதை எண்ணி விதைக்கமாட்டான். தன் கைக்கு எவ்வளவு முடியுமோ, அவ்வளவு விதைகளை அள்ளியெடுத்து நிலத்திலே வாரியிறைப்பான். அப்படிப்போல, நாமும், ஏழை ஜனங்களுக்கு கணக்குப் பார்த்து கொடுக்கக்கூடாது. நம்மால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு கொடுக்க வேண்டும். கர்த்தர் இதை தம்முடைய ஞாபக புத்தகத்தில் எழுதி வைத்து அதன் பலனை இம்மையிலும் மறுமையிலும் தருவார். சிலர் வாங்குகிறவர்களாக மட்டும் இருப்பார்கள், பிறருக்கு கொடுக்கமாட்டார்கள். கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும்; அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி மனிதர்கள் உங்கள் மடியில் கொட்டுவார்கள். நாம் வாங்குகிறவர்களாக மட்டுமல்ல; கொடுக் கிறவர்களாக மாறவேண்டும். உன் வலதுகை கொடுப்பதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது என்று வேதம் சொல்கிறது. நாம் எல்லோரும் அறியும் படியாக கொடுக்கக்கூடாது. கொடுத்ததை விளம்பரப்படுத்தக்கூடாது. யாருக்கும் தெரியாமல் அந்தரங்கமாய் கொடுக்கும்போது, கர்த்தர் வெளியரங்கமாய் பதிலளிப்பார். அப்படி விளம்பரப் படுத்தினால், அதற்கு பலன் கிடைக்காமல் போய்விடும். நாம் மற்றவர்களுக்கு கொடுக்கும்போது, நாம் கொடுத்ததை திருப்பி நமக்கு கொடுக்க முடியாதவர்களுக்கு கொடுக்கவேண்டும். **வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமை அடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்** (நீதிமொழி கள் *11:24*). நாம் தாராளமாக மற்றவர்களுக்கு கொடுக்கும்போது, மேலும், மேலும் பெற்றுக் கொள்வோம். எல்லாவற்றையும் இழந்துவிடமாட்டோம். மிகுதியான ஆசீர்வாதத்தை கர்த்தரால் கொடுக்க முடியும். மற்றவர்களுக்கு கொடுக்கும் அளவிற்கு கர்த்தர் செழிப்புள்ளவர்களாக மாற்று வார்.

நாம் தேவையில் இருப்பவர்களுக்கு கொடுக்காமல் நம் இருதயத்தை கடினமாக்கி அடைத்துக் கொண்டால், கர்த்தரால் நம்மை ஆசீர்வதிக்க முடியாது. கஞ்சத்தனத்துடன் வேண்டா வெறுப்புடன் கொடுக்கும்போது, நாம் வறுமையோடுதான் இருப்போம். உலக நீதி என்னவென்றால், நாம் பிறருக்கு கொடுக்கும்போது, நம் சேமிப்பு குறைந்துவிடும். சேர்த்து வைத்தால் பெருக்கம் உண்டாகும் என்பதே. ஆனால், தேவனுடைய நீதி என்னவென்றால், நாம் பிறருக்கு கொடுத்து, உதவி செய்யும்போது, கர்த்தரிடமிருந்து அதிகமாக பெற்றுக் கொள்வோம் என்பதே.

நம்மிடம் இருப்பதில் சிறந்ததை கர்த்தருக்கு தாராள மனதுடன் கொடுக்க வேண்டும். நம் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். **நமது களஞ்சியங்கள் தானியங்களால் நிரம்பும், பாத்திரங்கள் திராட்சை ரசத்தால் நிரம்பும்** (நீதிமொழிகள் *3:9,10*). இந்த வார்த்தை, நமக்கு கிடைக்கும் அபரிதமான ஆசீர்வாதங்களை குறிப்பிடுகிறது. கர்த்தருக்கென்று நாம் கொடுக்கும்போது, நமக்கு தேவையான அனைத்தையும் மல்கியா *3:10*ன்படி கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன், உற்சாக**

**மாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரிந்தியர் 9:7).** மற்றவர்கள் சொன்னதினால், கட்டாயத்தின் பேரில் நாம் கொடுக்கக் கூடாது. தேவைக்கு அதிகமாக இருந்தாலும் சிலருக்கு கொடுக்க மனது வராது. அப்படி கொடுக்க விருப்பம் இல்லாமல் கொடுக்கக் கூடாது. மனமுவந்து சரியான நேரத்தில் கொடுப்பவர்களை கர்த்தர் அதிகமாக நேசிக்கிறார். கர்த்தருடைய ராஜ்யத்தில் விதைக்கிறோம் என்ற உற்சாகத்தோடு கொடுக்க வேண்டும்.

***சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான்*** (மத்தேயு 10:42). கர்த்தரை உண்மையாய் நேசித்தோமென்றால், சுயநலமில்லாமல், அவரை பின்பற்றுகிறவர்களுக்கு உதவி செய்வோம். கர்த்தர் அதை கணக்கில் வைத்து, அதற்கேற்ற பலனை நமக்கு தருவார். பரிசுத்தவான்களுக்கு கொடுக்கும்போது, அவர்கள் தேவனுக்கு நன்றி சொல்வார்கள். நமக்காக, தேவனை நோக்கி ஜெபிப்பார்கள். நல்ல எண்ணத்தோடு மனப்பூர்வமாக கொடுத்தால், எல்லாவித நன்மைகளும், செல்வமும் கர்த்தர் நமக்கு தருவார்.

## தனக்காக மட்டும் சேர்த்து வைத்தவன்

தேவனிடத்தில் அன்பு கூராமல், கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில்லா மல், தனக்காக மட்டும், பொக்கிஷங்களை சேர்த்து வைத்த மனிதனைக் குறித்து, லூக்கா 12:21ல் பார்க்கலாம். ஐசுவரியமுள்ள அம்மனிதனின் நிலத்தில் நல்ல விளைச்சல் கிடைத்தது. அதனால் தானியங்களை சேர்த்து வைக்க இடமில்லாததால், களஞ்சியங்களை இடித்து கட்ட தீர்மானித்தான். விளைந்த தானியத்தையும், பொருட்களையும் சேர்த்து வைத்து, நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, வாழ்க்கையை அனுபவிக்கலாம் என்று தன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான். ஆனால், தேவன்



அவனை நோக்கி, மதிகேடனே! இன்று இரவில் நீ மரிப்பாய், நீ உனக்காக சேர்த்து வைத்துள்ள பொருட்களை யார் பெற்றுக் கொள்வார்கள் என்றார். பாருங்கள். ஐசுவரியவான் இந்த பூமிக்குரிய வாழ்க்கையைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருந்தான். பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சம் கூட அவனுக்கு இல்லை. தனக்கு தேவன்தான் எல்லாவற்றையும் கொடுத்தார். அதற்காக அவருக்கு நன்றி சொல்ல வேண்டும் என்ற எண்ணம் இல்லாதிருந்தது. தான் (ஆத்துமா) பரலோகத்துக்கு போகவேண்டும் என்ற எண்ணமும் இல்லை. தேவனுக்கும் அவனுக்கும் தொடர்பில்லாதிருந்தது. நாமும் நம்மை குறித்து மட்டும் சிந்தித்து மற்றவர்களைக் குறித்து சிந்திக்காமல், மரணத்திற்குப் பின் நாம் சேர்த்து வைத்த பொருட்கள் என்னவாகும்? நம் ஆத்துமா எங்கே போகும்? என்ற சிந்தனையில்லாமல் இருந்தோமென்றால், நம் நிலைமையும், இத்தகையதே. கர்த்தருக்கென்று பணத்தை கொடுக்கும்போது, நாம் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறோம். தேவைக்கும் அதிகமாக நாம் ஆஸ்திகளை சேர்த்து வைப்பதைவிட தேவையோடு இருப்பவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டும். தாவீது இப்படியாக கூறுகிறான்: **''வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாகவே சஞ்சலப்படுகிறான்; ஆஸ்தியை சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்வான் என்று அறியான்''** (சங்கீதம் 39:6). நம்



வாழ்க்கை புகையைப் போன்றது. நிலையில்லாதது. தேவனின் சித்தத்தின்படி செய்கிறவனே நிலைத்திருப்பான். தேவன் விரும்புகிறபடி எல்லா காரியங்களையும் செய்ய வேண்டும். நம் வாஞ்சை, விருப்பம் எல்லாம் தேவன்மேல் இருக்க வேண்டும். உலக ஆஸ்திகள், பொருட்கள் மேல் இருக்கக்கூடாது. நாளைக்கு என்ன நடக்கும் என்று நமக்கு தெரியாது. **சிறுமைப்பட்டவனும், எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாக திறக்க வேண்டும்** (உபாகமம் 15:11). அவர்கள் கஷ்டப்படுவதையும், தேவையிலிருப்பதையும் அறிந்திருந்தும் உதவி செய்யவில்லை என்றால் அது நமக்கு பாவமாயிருக்கும். பூமியில் எப்படி பாதுகாப்பாயிருப்பது என்று தங்கள் வாழ்க்கையை குறித்தே அநேகர் சிந்தித்துக் கொண்டு, கொஞ்சமாக செலவு செய்து கொண்டு சிக்கனமாக இருப்பார்கள். இந்த உலக வாழ்க்கையைக்குப் பின், வாழப்போகும் நிலையான பரலோக வாழ்க்கையை குறித்து சிந்திப்பதேயில்லை. ஒரு சிலரே ஆஸ்திகள் மேல் தங்கள் நம்பிக்கையை வைக்காமல் கர்த்தர்மேல் நம்பிக்கையை வைப்பார்கள். தாவீது, ராஜா இதை உணர்ந்து கொண்டான். நாம் எப்படி இருக்கிறோம்?

சில பெற்றோர்கள் கஷ்டப்படுகிற பிள்ளைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமில்லாமல், இருக்கிறவர்களுக்கே உதவி செய்துகொண்டு இருப்பார்கள். கர்த்தருடைய பார்வையில் இது நியாயமற்ற செயல். இன்னும் சிலர் பணம் இருப்பவர்களை மிகவும் உயர்வாக பார்ப்பார்கள், பணம் இல்லாதவர்களை அற்பமாக பார்ப்பார்கள். சிலர் தவறு செய்தவர்களுக்கு ஆதரவாயிருந்து, அவர்களுக்கு சாதகமாக நியாயப்படுத்தி பேசி, அவர்களை நல்லவர்கள் என்று கூறுவார்கள். ஏனென்றால், அவர்கள் பணம் படைத்தவர்களாயிருப்பதினாலும், அவர்களுடைய உறவு தங்களுக்கு வேண்டும் என்பதினாலும், இப்படியாக நடந்து கொள்வார்கள். தவறே செய்யாதவர்களை குற்றவாளி என்று கூறுவார்கள். நீதிமானின் நியாயத்தை புரட்டுகிறவர்களுக்கு ஐயோ! என்று வேதம் கூறுகிறது. **துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானை குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப் பானவர்கள்** (நீதிமொழிகள் 17:15).

## அநீதியினால் வந்த செல்வம்

**தனக்கு (யோயாக்கீம்) விஸ்தாரமான வீட்டையும், காற்று வீசும் விசாலமான மேலறைகளையும் கட்டுவேனென்று சொல்லி, பலகணிகளைத் தனக்குத் திறந்து, கேதுரு பலகைகளை வைத்து, ஜாதிலிங்க வருணம் பூசி, அநீதியினாலே தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டி, தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலி கொடாமல், அவனைச் சும்மா வேலை கொள்ளுகிறவனுக்கு ஐயோ! நீ கேதுருமர மாளிகைகளில் உலாவுகிறபடியினாலே ராஜாவாயிருப் பாயோ? உன் தகப்பன் போஜன பானம் பண்ணி, நியாயமும் நீதியுஞ்செய்த போது அவன் சுகமாய் வாழ்ந்திருக்கவில்லையோ? அவன் (யோசியா) சிறுமையும், எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படிச் செய்வ தல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார்** (எரேமியா 22:13-16).

கர்த்தர் யோயாக்கீம் என்ற ராஜாவைக் குறித்தும் அவனது தகப்பன் யோசியா ராஜாவைக் குறித்துமே இப்படியாகச் சொல்லுகிறார். வேலை செய்யும் ஏழை ஜனங்களுக்கு நியாயமான கூலியை கொடாமல் வெறுமனே (சும்மா) வேலை வாங்கினான் யோயாக்கீம் ராஜா என்று கர்த்தர் குறிப்பிடுகிறார். ஆனால்,

அவனோ, தனக்கு விசாலமான வீட்டை கட்டிக் கொண்டு சுகமாய் வாழ்ந்தான். காற்று நன்றாக வீட்டுக்குள் வரும்படியாக பலகணிகளை வைத்துக் கட்டினான். மரவேலைகளை கேதுரு மரத்தினால் செய்து, அதற்கு ஜாதிலிங்கம் வர்ணம் பூசினான். தனக்கு சுகமாய் வாழ்வதற்கு எப்படியெல்லாம் யோசிக்கிறான் பாருங்கள். ஆனால், தனக்கு வேலை செய்பவர்களுக்கு நியாயமான கூலியை கொடுக்க வேண்டும் என்ற எண்ண மில்லை. இங்கே நாம் அவனது சுயநலத்தையே பார்க்கிறோம். அவ னுக்கு நல்ல சுகம் கொடுத்து, ராஜாவாய் வைத்தது கர்த்தர். ஒருவனுக்கு மற்ற ஜனங்கள்மீது அதிகாரத்தை கர்த்தர் கொடுத்திருக்கிறாரென்றால், ஒரு நோக்கத் தோடு கொடுக்கிறார். ஏழைகளின் பெலன், நெருக்கப்படுகிற எளியவர் களுக்கு திடன், திக்கற்றவர்களின் தகப்பன் விதவைகளை நியாயம் விசாரிக்கிறவர், பரதேசிகளை காப்பாற்றுகிறவர். இப்படி யெல்லாம் தம்மைப்பற்றி, கர்த்தர் சொல்லுகிறார். சிறுமைப்பட்ட ஏழை ஜனங்களை நியாயமாய் நடத்த வேண்டும் என்று கர்த்தர் வாஞ்சிக்கிறார். அப்படி நாம் நடந்தோமென்றால், அதுவே கர்த்தரைக் குறித்து, சரியாக அறிந்து கொண்டதன் அடையாளம் என்று கர்த்தர் சொல்கிறார். யோசியா ராஜா அப்படியாக இருந்தான் என்று கர்த்தரே சாட்சியாகக் சொல்லு கிறார். நாம் நமக்கு சௌரியமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். ஆனால் சுகமாய், சமாதானமாய் வாழவேண்டு மென்றால், ஏழை, எளிய ஜனங்களுக்கு உதவி செய்கிறவர்களாக வும், நியாய மாகவும் நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், கர்த்தர் நமக்கு சுகத்தையும், சமாதானத்தையும் தருவார் என்று கர்த்தரே சொல்லுகிறார். இதையே புதிய ஏற்பாட்டில் மிகச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தாயோ, அதை எனக்கே செய்தாய் என்று கர்த்தர் குறிப்பிடுகிறார்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே நாம் எல்லோரும் அவரோடுகூட பரலோகம் செல்வோம். அங்கே அவர் இரண்டு பிரிவுகளாக நிறுத்துவார். ஒரு பிரிவு ஆசீர்வதிக் கப்பட்டவர்கள். மற்றது சபிக்கப்பட்ட வர்கள். இங்கே இந்த பூமியிலே, யாரெல்லாம் பசியாயிருந்தவர்களுக்கு போஜனம் கொடுத்தோமோ, உடையில் லாதவர்களுக்கு உடையை கொடுத் தோமோ, வியாதியாய் இருந்தவர்களை போய் பார்த்து அவர்களுக்கு உதவி செய்தோமோ, யாரெல்லாம் வாழ்க்கை யில் சிக்குண்டு தவித்தவர்களுக்கு உதவி செய்தோமோ, அவர்களெல்லோரும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக நிறுத்தப்படுவோம். இப்படியெல்லாம் நடக்காதவர்கள் சபிக்கப்பட்டவர்களாக நிறுத்தப்படுவார்கள். பூமியிலே கஷ்டப் படும் ஏழை, எளிய ஜனங்களுக்கு நாம் இரக்கப்பட்டு, நீதியும், நியாயமும் செய்வதை, கர்த்தர் தமக்கே செய்ததாக கூறுகிறார். ஒருவன் வேதத்தை இரவும், பகலும், தியானிக்கும்பொழுது, கர்த்தரைக் குறித்தும், விஷேசமாக கர்த்தருடைய வாஞ்சை, விருப்பத்தைக் குறித்தும், நன்கு அறிந்து கொள்கிறான். அப்படிப்பட்ட மனுஷனே தேவ அன்போடுகூட இரக்கமுள்ளவனாய், மற்றவர்களுக்கு உதவி செய்பவனாக இருப்பான். வேதத்தை இரவும் பகலும் வாஞ்சையோடு படிக்கவேண்டும். அப்பொழுது கர்த்தருடைய அன்பும், சிந்தையும் உங்களுக்குள் கடந்து வரும். இயேசுவைப்போல மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறிப்போவீர்கள்.

## தேவனிடத்தில் அன்பு கூருவது

முழு இருதயத்தோடும், முழுமன தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அவரிடத்தில் அன்பு கூருகிறதும், தன்னிடத்தில் அன்பு கூருகிறது போல பிறனிடத்தில் அன்பு கூருகிறதுமே சர்வாங்க தகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக் கிறது (மாற்கு 12:33). தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவது? இயேசு கிறிஸ்துவே உண்மையான தேவன்



என்று விசுவாசித்து அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரு டைய வழிநடத்துலின் படி நாம் வாழ வேண்டும். நாம் இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்டது மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கும் அவரைக் குறித்து எடுத்துச் சொல்லி, அவர்களை கிறிஸ்து வண்டை வழிநடத்தி அவரில் நிலைத் திருக்கும்படி செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்துவை உண்மையாய் நேசிப்பவர் கள் இரக்க குணமுள்ளவர்களாய் இருப்பார்கள். அவர்கள் அழிந்து போகும் ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துபவர் களாக இரட்சிப்புக்குள் நடத்துவதற்கு உதவியா யிருப்பார்கள்.

நாம் வேதத்தை படித்து தியானிப் பதன் மூலம், ஜெபத்தின் மூலம், தேவ அன்பினால் நிரப்பப்பட்டு (ஆவியான வரின் அபிஷேகம்) கர்த்தரில் நிலைத்திருக்க வேண்டும். நாம் கர்த்தரில் நிலைத்திருக்கும்போது, கனி கொடுக்கி றவர்களாக மாறுவோம். ஆவியின் கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம் இச்சை யடக்கம் நம்மிலிருந்து வெளிப்படும்.

ஆபிரகாம் தன் சந்ததியினருக்கு கர்த்தரைப் பற்றியும், அவருடைய நீதியை யும், நியாயத்தையும் பற்றி போதித்தான். நாமும் கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் பிள்ளைகளை வளர்த்து, அவர்களுக்கு முன்மாதிரியாக நாம் வாழவேண்டும். அப்பொழுது அவர்களும் நீதியும், நியாயமுமாக நடந்து கொண்டு கர்த்தருக்கு பிரியமாய் வாழ்வார்கள்.

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. | 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா



# ஆவியில் நிரம்பி ஜெபிப்பது எப்படி?

– ஜான் பன்யன்



தேவனோடு தனிப்பட்ட உறவு நிலையை உண்டாக்கிக்கொள்ள ஜெபத்தை ஒரு வழிமுறையாகத் தேவன் நியமித்துள்ளார். உற்சாகத்தோடு நாம் அடிக்கடி ஜெபிக்கும்போது, நம்முடைய ஜெபம் தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களைப் பெற்றுத் தருகிறது. அந்த ஜெபம் யாருக்காக நாம் ஜெபிக்கிறோமோ அவர்களுக்கு மட்டுமல்லாமல், நமக்கும் பயனுள்ளதாக இருக்கிறது. ஜெபம், தேவனுக்கென்று நம்முடைய இருதயத்தைத் திறக்கிறது. நம்முடைய ஆத்துமா வெறுமையாக இருந்தாலும், ஜெபத்தின் மூலமாக அது தேவனால் நிரம்பி வழியும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்கிறது.

ஜெபத்தை விளக்க நான் தெரிந்து கொண்ட ஒரே காரியம் ஜெபத்தின் மையமாகிய இருதயம் எப்படி இருக்கிறது என்பதுதான். நாம் இரு கரங்களையும் உயர்த்தலாம், கண்களை உயர்த்தலாம், சத்தத்தை உயர்த்தலாம். ஆனால், இருதயம் சீராக இல்லையென்றால், அவைகளெல்லாம் பயனமற்றவைகளே.

உங்களுடைய ஜெபங்களில் எப்பொழுதும் மனப்பூர்வமுடன் உங்களுடைய இருதயத்தை அல்லது ஆத்துமாவை தேவனிடத்தில் ஊற்றிவிட வேண்டும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். நாம், மனப்பூர்வமான நிலையில் இல்லாவிட்டால், தேவன் நம்முடைய விண்ணப்ப வார்த்தைகளை ஜெபமாக ஏற்றுக்கொள்ளமாட்டார். **உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்** (எரேமியா *29:13*).

ஒருவர், தனிமையில் ஒரு மூலையிலிருந்து ஜெபித்தாலும், உலகம் முழுவதும் காணத்தக்கதாக ஜெபித்தாலும், அவரில் மனப்பூர்வமான நிலை இருக்குமானால், அது ஒரே மாதிரியாகத்தானிருக்கும். மற்றவர்கள் காணத்தக்கதாக ஒரு தோற்றத்தையும், தேவன் காணத்தக்கதாக மற்றொரு தோற்றத்தையும் அளிக்கும் இரட்டை வேடம் இருக்காது. மனப்பூர்வமான ஜெபம் உதட்டளவில் நிற்பதல்ல. ஏனென்றால், தேவன் இருதயத்தைப் பார்க்கிறார். இருதயத்திலிருந்து ஏறெடுக்கும் ஜெபம், தேவனைக் காண்கிறது. அப்படிப்பட்ட ஜெபம், தம்முடைய பிள்ளைகளிடத்திலிருந்து வருவதாகத் தேவன் கருதுகிறார். பிள்ளைகளிடத்திலிருந்து வரும் ஜெபத்தை உடனே கனப்படுத்துகிறார்.

ஜெபம் என்பது ஏதோ வீண் வார்த்தைகளால் அலப்புவதோ, பிதற்றுவதோ, தேவனை ஏதோ சில வார்த்தைகளால் புகழ்ந்துரைப்பதோ அல்ல. இருதயத்தில் தோன்றும் உணர்வுகளாகும். பாவத்தின் ஆபத்தான விளைவை நாம் நன்கு அறிந்திருக்கிறபடியால், நமக்கு அவருடைய இரக்கம் தேவை என்ற உணர்வோடு நாம் ஜெபிக்கிறோம். நமது ஆத்துமாவும், அதையே வாஞ்சிக்கிறது. நம்முடைய ஆத்துமா அப்படிப்பட்ட உணர்விலிருந்து பெருமூச்சுடனும், வேதனைக்குரலுடனும், இருதயத்தை உடைக்கிறது. வேதனையும் கசப்பும் நிறைந்து அவற்றின் நெருக்கத்தின் காரணமாக இருதயத்திலிருந்து பொங்கி வழிகிற சரியானதொரு ஜெப அனுபவம் ஏற்படுகிறது. அன்னாள், ஒரு குழந்தை வேண்டுமென ஜெபித்தபொழுது **'மனங்கசந்து, மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள்'** (*1* சாமுவேல் *1:10*) என்று வேதம் சொல்லுகிறது. தேவன் அவளுடைய ஜெபத்தைக் கேட்டார். பின்நாட்களில் மிகவும் புகழ்பெற்ற சாமுவேல் தீர்க்கதரிசியை அவள் பெற்றெடுத்தாள். நம்முடைய ஜெபம் நமது உள்ளான உணர்வுகளை தேவனுக்கு வெளிப்படுத்திக் கொடுக்கிறது. பாவத்தின் கொடிய தன்மையைக் குறித்த உணர்வு நமக்கு இருக்கிற காரணத்தால், நம்முடைய ஜெபங்கள் நம்முடைய உணர்ச்சிகளையும், உள்ளுணர்வுகளையும் தேவனுக்கு எடுத்துச் செல்வதாக உள்ளன.



சில வேளைகளில் பரிசுத்தவான்களின் ஜெபங்கள் முற்றிலும் துதித்தலும் ஸ்தோத்திரமுமாக மாறிவிடுகிறது. தேவனுடைய மக்களுடைய ஜெபம், ஸ்தோத்திரங்களால் நிறைந்து விடுகிறது. உள்ளுணர்வோடுகூடிய ஸ்தோத்திரத்தோடு நாம் அவருடைய கரத்திலிருந்து பெற்றுக்கொண்ட இரக்கங்களுக்காய் ஜெபிக்கும்போது, நம்முடைய ஜெபம் தேவனுடைய பார்வையில் மிகுந்த வல்லமையுள்ளதாக மாறுகிறது. அப்படிப்பட்ட ஜெபம் சொல்லி முடியாத வல்லமையுள்ளதாயிருக்கிறது.

ஜெபங்களில் சில வேளைகளில் நாம் பெற்றுக்கொள்ள அவசியமான இரக்கத்தைக்குறித்து நமது ஆத்துமாவில் உள்ளுணர்வு உண்டாகிறது. தாவீது ஜெபித்தது போன்று நாமும் ஜெபிக்கும்போது ஆத்துமா கொளுந்துவிட்டெரியும் அனுபவத்தை பெற்றுக்கொள்கிறது. யாக்கோபு, தாவீது, தானியேல் மற்று முள்ளோருக்கும் தேவன் தங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார் என்ற உள்ளுணர்வு இருந்தது. அந்த உள்ளுணர்வுதான் அவர்களை ஜெபிக்கத் தூண்டியது. ஏதோ வீணான வார்த்தைகளால் அலப்பிக்கொண்டல்ல, யாரோ எழுதி தயாரித்த வார்த்தைகளைக் கொண்டல்ல. வல்லமையோடும், ஊக்கத்தோடும், பெருமூச்சோடும் தொடர்ந்து ஜெபித்தனர். தங்களது தேவைகளை குறித்தும், தங்களது பரிதாபமான நிலவரங்களைக் குறித்தும், உள்ளுணர்வு உள்ளவர்களாக அவருடைய இரக்கங்களுக்காய் மன்றாடி மனப்பூர்வமாக ஜெபித்தனர்.

சரியான ஜெபத்தில் ஜீவனையும், பெலத்தையும், திடனையும், உள்ளன்பையும் நீங்கள் கண்டுகொள்ள முடியும். சங்கீதத்திலுள்ள இந்த வேத பகுதிகளை இருதயத்தின் ஆழத்திலிருந்து உங்களால் ஜெபிக்க முடியுமா? **''மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது''** (சங்கீதம் *42:1*). **''இதோ, உம்முடைய கட்டளைகள்மேல் வாஞ்சையாயிருக்கிறேன்; உமது நீதியால் என்னை உயிர்ப்பியும்''** (சங்கீதம் *119:40*). **''என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப் பிராகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது; என் இருதயம் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது''** (சங்கீதம் *84:2*). **''கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின் மேல் ஆவலாயிருக்கிறேன்; உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி''** (சங்கீதம் *119:174*). **''உமது நியாயங்கள் மேல் என் ஆத்துமா எக்காலமும் வைத்திருக்கிற வாஞ்சையினால் தொய்ந்து போகிறது''** (சங்கீதம் *119:20*). இந்த ஜெபத்தை கவனித்துப் பாருங்கள். எப்படிப்பட்ட உள்ளன்பான ஜெபம் என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

தானியேலுடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட தியான அனுபவங்களைக் காணலாம். **''ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும்; என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதை தாமதியாமல் செய்யும்; உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன்''** (தானியேல் *9:19*). இதில் ஒவ்வொரு பகுதியும் எவ்வளவு வல்லமையான உணர்ச்சிவேகமும், அவசரமும் அடங்கியிருக்கிறது என்பதைப் பாருங்கள். இயேசுவின் அனுபவத்தைக் காணும்போது, **''அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது''** (லூக்கா *22:44*) என்று காண்கிறோம்.

- தொடரும்

# பரிபூரணமான விசுவாசம்

**- எஸ். பால்ராஜ் கென்னடி**

ஏன் இந்தக் கஷ்டம்? ஏன் இந்தப் போராட்டம்? இதுதானே உங்களது கேள்வி.

வேதத்தை தியானிக்கும்போது இதற்கான பதில் நமக்கு கிடைக்கும். நமது துக்கத்தினாலே, சோர்வினாலே நாம் மூடப்பட்டிருக்கையில், நம்மால் எதையுமே சரியாக சிந்திக்க முடியாது. நமது இந்தக் கஷ்டமான சூழ்நிலை நீங்கும்படியாக ஜெபிக்கிறோம். ஆனாலும், மனதிலே சமாதானம் இல்லை. ஏனென்றால், நமக்குள்ளே உள்ள கேள்விக்கான பதில் கிடைக்காததினாலேயே. அதற்கு ஒரே வழி, வேதத்தை தியானிப்பதே.

வேதம் இப்படியாகச் சொல்லுகிறது: **என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது** (யாக்கோபு *1:2-4*). உங்களது விசுவாசத்தை (கர்த்தர் மேல் நீங்கள் வைத்திருக்கிற நம்பிக்கையை) பரீட்சித்து பார்ப்பதே இந்த காலகட்டம். கஷ்டப்படும்போது நம்மில் அநேகர், கர்த்தரைவிட்டு விலகிச் சென்றுவிடுகிறார்கள். ஏனென்றால், கர்த்தர் என்னை ஆசீர்வதிக்கவில்லையே, என்னை கஷ்டப்படுத்துகிறாரே. நாம் சுகமாய் வாழவேண்டும். இப்படித்தான் கர்த்தர் என்னை நடத்த வேண்டும். நான் அவரை வணங்கவில்லையா? ஆலயத்திற்கு செல்லுகிறேனே, எத்தனையோ பேர் ஆலயத்திற்கே வருவதில்லை. இன்னும் பலர் அவரை தெய்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்களைக் காட்டிலும், நான் மேன்மையானவனல்லவா? இப்படித்தான் அநேகருக்கு எண்ணங்கள் இருக்கின்றது. இன்னும் சிலருக்கு இப்படியாக எண்ணங்கள் உண்டு: துன்மார்க்கமாய் ஜீவிப்பவனெல்லாம் நன்றாக இருக்கிறான். சன்மார்க்கமாய் வாழும் எனக்கு ஏன் கர்த்தர் இவ்வளவு கஷ்டங்களைக் கொடுக்கிறார்? வேறு சிலர் இப்படியாக சிந்திக்கிறார்கள்: கஷ்டத்தின் மூலம்தான் கர்த்தரை நான் நெருங்க முடியுமா? கர்த்தர் நினைத்தால் வேறு வழியில் என்னைத் தம்மோடு நெருங்க வைக்கலாமே. கர்த்தருக்குத் தெரியாத வழியா?

பரம ஞானத்தினாலே செய்யப்படுகிறக் காரியங்களை மனித ஞானத்தினாலே அறிந்து கொள்ள முடியாது. அதற்காகவே வேதம் நமது கர்த்திலே கொடுக்கப்பட்டுள்ளது. வேதத்தை எந்த மனிதனும் தனது ஞானத்தினாலே எழுதவில்லை. தேவன், நமது பரிசுத்த ஆவியினாலே தம்முடைய ஊழியக்காரரோடு பேசி எழுதப்பட்டதே வேதம். விசுவாசத்திற்காகவே இந்தக் கஷ்டம் என்று வேதம் சொல்கிறது. **விசுவாசமில்லாமல், தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்** (எபிரெயர் *11:6*) என்று வேதம் விசுவாசத்தைப் பற்றி சொல்கிறது. இன்றைக்கும் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஜீவிக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். **காணாமலே



நம்புவதுதான் விசுவாசம்** (எபிரெயர் *11:1*). நமக்கு அந்த விசுவாசம் இருக்கிறது. அவரைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர் என்பதையும் விசுவாசிக்க வேண்டும். அதற்காகவே நமக்கு இந்தப் பாடுகளின் பாதை. நமது விசுவாசத்தை பரிபூரணப்படுத்தவே கர்த்தர் இப்படிப்பட்ட பாதையின் வழியே நடத்துகிறார். எப்பொழுது விசுவாசம் பரிபூரணப்படும் என்பதையும் அவரே சொல்லுகிறார்: விசுவாசத்தோடு பொறுமையும் சேரும்பொழுதே.

பொறுமை வேறு, சகிப்புத்தன்மை வேறு. இன்று நம்மில் அநேகர் சகிப்புத் தன்மையை பொறுமை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அதை ஒரு உதாரணத்துடன் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். பிரபலமான ஒரு தலைவர் (முதல்வரோ, பிரதம மந்திரியோ, ஜனாதி பதியோ) நமது நகரத்தின் வழியே தமது காரில் கடந்து செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். நாம் அந்த வழியாகக் கடந்து செல்லவேண்டிய சூழ்நிலை. காவல்துறை, அவர்களுடைய பாதுகாப்பு, நேரம் இவற்றின் காரணமாக போக்குவரத்தை நிறுத்தி வைப்பார்கள். அப்பொழுது நாம் காத்திருந்தாக வேண்டும். அப்படி நாம் காத்திருக்கும்போது நமக்கு இருப்பது பொறுமை இல்லை. அது சகிப்புத்தன்மை. எப்பொழுது அவர்கள் அந்த இடத்தை கடந்து செல்வார்கள்? ஏன்தான் இந்த நேரத்தில் வந்தார்களோ? இப்படித்தான் நமது எண்ணங்கள் இருக்கும். சமாதான மில்லாமல் இருப்போம். பொறுமை என்பது இதற்கு நேர் எதிரானது. ஒன்று நடக்கும்வரை நாம் அமைதியாக சமாதானத்தோடு காத்திருப்பது. கர்த்தர் நிச்சயமாக எனக்கு ஆசீர்வாதத்தைத் தருவார் என்று சமாதானத் தோடு காத்திருப்பதே பொறுமை. இந்த பொறுமையை கர்த்தருடைய வார்த்தையை நீங்கள் தொடர்ந்து படிக்கும்போது பெற்றுக் கொள்ளலாம் (ரோமர் *15:4*). அநேக தீர்க்கதரிசனங்கள், வாக்குத்தத்தங்கள் நமக்கு ஏன் நிறைவேறவில்லையென்றால் விசுவாசமும், பொறுமையும் இல்லாதினாலேயே. **இதோ பொறுமையாயிருப்பவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே** (யாக்கோபு *5:11*). இங்கே யோபின் பொறுமையைக் குறித்தும், அதனால் அவனுக்கு கர்த்தர் செய்ததையும் குறித்துப் பார்க்கிறோம். யோபு எல்லாவற்றையும் இழந்தான். சாத்தான், அவனது மனைவி மூலம் கர்த்தரை தூஷிக்கச் சொல்லுகிறான், உயிரை விட்டுவிடச் சொல்கிறான். ஆனால், யோபு கர்த்தர்மேல் விசுவாசத்தோடு இருக்கிறான். அவனது விசுவாசம் பொறுமையோடு சேர்ந்து காணப்படுகிறது. அந்த கஷ்டத்தின் மத்தியிலும் கர்த்தரை மறுதலிக்காமல், அவரைவிட்டு விலகாமல் கர்த்தரையே சார்ந்து இருக்கிறான். அதேபோல, ஆபிரகாமும், தனது 75 வயதிலே பிள்ளை கொடுப்பேன் என்று கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தத்தை முழுமையாக விசுவாசித்து பொறுமையோடு காத்திருந்தான். அவனது 100வது வயதில்தான் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறினது. அவனது மனைவி சாராள் அவசரப்பட்டபோது இஸ்மவேல் பிறந்தான். அவன் முரட்டாட்டம் உள்ளவனாக இருந்தான். அது அவர்களுக்கு வேதனை அளித்தது.

கர்த்தர் தங்கள் மீது வைத்துள்ள அன்பை நினைத்து பொறுமையோடு காத்திருந்தபொழுது, யோபும், ஆபிரகாமும் உச்சிதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்கள். யோபின் பொறுமையையும், ஆபிரகாமின் விசுவாசத்தையும் சேர்த்து தர கர்த்தர் வல்லவராயிருக்கிறார். இந்த இரண்டும் வேதத்தின் வார்த்தையைத் தொடர்ந்து நீங்கள் படிக்கும்போதே வரும். **விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்** (ரோமர் *10:17*); **தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமை** (ரோமர் *15:4*).

நீங்கள் வேதத்தை எவ்வளவு படிக்கிறீர்களோ, அவ்வளவு விசுவாசமும் பொறுமையும் உங்களுக்கு வரும். பரிபூரணமான விசுவாசத்தைப் பெறுவீர்கள். ஆமென்!